13402

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
※ மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணைத்** தெளிவாக எழுதுக.
※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
※ ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ..................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**1.** வணிகமொன்றின் முதனிலை நோக்கங்களில் ஒன்றாக அமைவது
(1) புத்தாக்கங்களை விருத்தி செய்தல்
(2) நுகர்வோருக்கான பெறுமதியினை வழங்குதல்
(3) போட்டியை அதிகரித்தல்
(4) ஒழுக்கம் சார்ந்த நியமங்களைப் பேணுதல்
(5) சமூக அபிவிருத்தியினை ஊக்குவித்தல் (......)

**2.** பின்வரும் உதாரணங்களுள் பொருள், சேவை ஆகிய இரண்டினையும் பிரதிபலிப்பது யாது?
(1) சிகை அலங்காரம் (2) பாடப் புத்தகம்
(3) நிகழ்நிலைத் திரைப்படம் (4) உணவகத்தில் உணவினை உட்கொள்ளுதல்
(5) புதினப்பத்திரிகை (......)

**3.** நுகர்வோர்களின் சூழல் விழிப்புணர்வு அதிகரிப்பதன் காரணமாக நிறுவனமொன்று தனது பொதியிடல் தந்திரோபாயத்தினை மாற்றம் செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி யாது?
(1) தொழில்நுட்பவியல் காரணி (2) பொருளாதாரக் காரணி (3) அரசியற் காரணி
(4) சட்டக் காரணி (5) சமூகக் காரணி (......)

**4.** பின்வருவன வணிகமொன்றின் சில பொறுப்புக்கள் ஆகும்.
A - சட்ட இணக்கப்பாடு B - நேர்மையான விளம்பரங்கள்
C - நியாயமான போட்டி D - உரிய காலத்தில் வரியினைச் செலுத்துதல்
E - வெளிப்படைத்தன்மையினைப் பேணுதல் F - நுகர்வோர் உரிமைகளை மதித்தல்
G - இடர் முகாமை H - ஊழலைத் தவிர்த்தல்
மேலே தரப்பட்டவற்றுள், வணிகமொன்றின் ஒழுக்கம்சார் பொறுப்புக்களை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?
(1) A, B, C, F, H (2) A, B, C, F, G (3) B, C, E, F, H
(4) B, D, E, G, H (5) C, D, E, F, G (......)

**5.** அங்கீகாரம் வழங்குபவரது பொருட்களை விற்பனை செய்வதில் ஈடுபடும் அமைப்பொன்றாக இனங்காணப்படுவது
(1) உற்பத்தி அங்கீகார வணிகம்
(2) வணிக அமைப்பு அங்கீகார வணிகம்
(3) உற்பத்திப்பொருள் அங்கீகார வணிகம்
(4) மாற்றல் அங்கீகார வணிகம்
(5) விநியோக அங்கீகார வணிகம் (......)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki

**6.** பின்வரும் அட்டவணையில் நாணயக் கொள்கைக் கருவிகள் சிலவும் அவற்றின் விவரணங்களும் தரப்பட்டுள்ளன.

| நாணய கொள்கைக் கருவிகள் | விவரணங்கள் |
|---|---|
| (i) ஓர் இரவுக் கொள்கை வீதம் (OPR) | A - அரச பிணைகளைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும் |
| (ii) திறந்த சந்தைச் செயற்பாடுகள் (OMOs) | B - உரிமம் பெற்ற வணிக வங்கிகளால் பேணப்பட வேண்டிய கட்டாய வைப்பு வீதம் |
| (iii) நிலையான வசதிகள் | C - தனிக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறை |
| (iv) நியதிச்சட்ட ஒதுக்கத் தேவைப்பாடு (SRR) | D - உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கு வழங்கப்படும் கடன் மற்றும் வைப்பு வசதிகள் |

மேலே தரப்பட்டுள்ள நாணயக் கொள்கைக் கருவிகளின் ஒழுங்கிற்கேற்ப அதன் விவரணங்களைச் சரியாகக் கொண்ட தெரிவு யாது?

(1) B, A, C, D (2) B, A, D, C (3) C, D, A, B
(4) C, A, D, B (5) D, A, B, C (......)

**7.** பின்வருவன வணிகமொன்றின் சில குணாம்சங்கள் ஆகும்.

A - உருவாக்குவற்கு இலகு B - பரஸ்பர முகவராண்மை
C - வரையறுக்கப்படாத பொறுப்பு D - வரையறுத்த பொறுப்பு
E - தொடர்ச்சியான நிலைத்திருப்பு F - சட்ட ஆளுமை
G - இலாபப் பகிர்வு H - நியதிச்சட்டக் கணக்காய்வு

மேலே தரப்பட்டவற்றுள், வரையறுத்த பொதுக் கம்பனி (PLC) ஒன்றுக்கு மாத்திரம் பொருந்தும் குணாம்சங்களைக் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, F, G (2) A, D, F, H (3) B, D, F, G
(4) D, F, G, H (5) D, E, F, H (......)

**8.** பின்வருவன உற்பத்தி வணிகமொன்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் சிலவாகும்.

A - விநியோகம் B - பயிற்சியளித்தல்
C - நிதி D - போக்குவரத்து
E - உற்பத்தி F - சந்தைப்படுத்தல்
G - மனித வள முகாமை H - கணக்காய்வு

மேலே தரப்பட்டவற்றுள், இவ்வணிகத்தின் பிரதான தொழிற்பாடுகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A, C, F, G (2) A, D, F, H (3) B, D, E, F
(4) C, D, E, G (5) C, E, F, G (......)

**9.** பின்வரும் அட்டவணையானது வணிக வகைகளையும் அவை தொடர்பிலான விவரணங்களையும் காட்டுகிறது.

| வணிக வகைகள் | விவரணங்கள் |
|---|---|
| (i) உருவமற்ற (Virtual) | A - ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு உரிமை மாற்றுதல் |
| (ii) சில்லறை | B - நாடு பூராவும் உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்தல் |
| (iii) தேசிய | C - எண்ணிமமயமாக்கல் மூலம் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல் |
| (iv) குடும்ப | D - இறுதி நுகர்வோருக்கு நேரடியாகப் பொருட்களை விநியோகித்தல் |

மேலே தரப்பட்டுள்ள வணிக வகைகளின் ஒழுங்கிற்கேற்ப அதன் விவரணங்களைச் சரியாகக் கொண்ட தெரிவு யாது?

(1) A, C, D, B (2) A, D, B, C (3) C, A, B, D
(4) C, D, B, A (5) D, C, B, A (......)

**10.** வழங்குநர் ஒருவருக்கு கொடுப்பனவினை மேற்கொள்வதில் சிறந்த உத்தரவாதமளிக்கக்கூடிய கொடுப்பனவு முறை யாது?

(1) காவியின் காசோலைகள் (2) பிற்திகதியிடப்பட்ட காசோலைகள்
(3) வங்கி வரைவுகள் (4) வாக்குறுதிச் சீட்டுக்கள்
(5) பரிமாற்று உண்டியல்கள் (......)

**11.** பின்வரும் அட்டவணையானது எண்ணிமமயமாக்கல் கொடுப்பனவு முறைகள் சிலவற்றையும் அவை தொடர்பான விவரணங்களையும் காட்டுகின்றது.

| கொடுப்பனவு முறைகள் | விவரணங்கள் |
|---|---|
| (i) இலத்திரனியல் பணப்பை | A - அண்மிய களத் தொடர்பாடல் (NFC) தொழில்நுட்ப அடிப்படையிலான கொடுப்பனவுகள் |
| (ii) இணைய வங்கியியல் | B - இயந்திரங்களால் வாசிக்கக்கூடிய குறியீடுகளைக் கொண்ட கொடுப்பனவுகள் |
| (iii) விரைவுத் துலங்கல் தொழில்நுட்பம் (QR) | C - எண்ணிமமயமாக்கல் கொடுக்கல்வாங்கல்களுக்காக இலத்திரனியல் ரீதியாகக் களஞ்சியப்படுத்தப்பட்ட பெறுமதி |
| (iv) தொடர்பில்லா (Contactless) அட்டைகள் | D - நிகழ்நிலைத் தளத்தினூடாக வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் |

மேலே தரப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகளின் ஒழுங்கிற்கேற்ப அதன் விவரணங்களைச் சரியாகக் கொண்ட தெரிவு யாது?

(1) A, C, B, D (2) A, D, C, B (3) B, D, C, A
(4) C, D, A, B (5) C, D, B, A (......)

**12.** பங்களிப்புத் தத்துவத்தினைப் பிரயோகிக்க **முடியாத** காப்புறுதியாக அமைவது

(1) தீக் காப்புறுதி (2) கடற் காப்புறுதி
(3) வாகனக் காப்புறுதி (4) ஆயுட் காப்புறுதி
(5) சுகாதாரக் காப்புறுதி (......)

**13.** பின்வருவன தொடர்பாடல் முறைகள் சிலவாகும்.

A - உள்ளகத் தொலைபேசி (Intercom) B - தனிப்பட்ட கடிதங்கள்
C - கூட்டங்கள் D - சுற்றறிக்கைகள்
E - இலத்திரனியற் தபால்கள் F - செயலமர்வுகள்
G - குறுஞ் செய்திச் சேவை (SMS) H - காணொளி அழைப்புகள்

மேலே தரப்பட்டவற்றுள் ஒருவருக்கு ஒருவர் மாத்திரம் தொடர்புகொள்வதற்கான தொடர்பாடல் முறைகளைக் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, D, F, G (2) A, B, E, G, H (3) B, D, E, F, G
(4) B, E, F, G, H (5) C, D, E, F, G (......)

**14.** குறியீடுகள், அட்டவணைகள் மற்றும் உருக்கள் ஆகியவை எந்தத் தொடர்பாடல் வகைக்குரியதாகும்?

(1) வாய்மொழி மூலமான (2) எழுத்து மூலமான
(3) காட்சி மூலமான (4) சைகை மூலமான
(5) வாய்மொழி மூலமல்லாத (......)

**15.** பின்வரும் அட்டவணையானது உள்ளூர் கம்பனி ஒன்றினது ஏற்றுமதி உருப்படிகள் சிலவற்றையும் சந்தைகளையும் காட்டுகின்றது.

| ஏற்றுமதி உருப்படிகள் | சந்தைகள் |
|---|---|
| பெருமளவு தேயிலை | ஐக்கிய இராச்சியம் |
| புத்தம் புதிய கடல் உணவுகள் | ஜப்பான் |
| வெட்டு மலர்கள் | ஐக்கிய அரபு அமீரகம் |
| தைத்த ஆடை மாதிரிகள் | ஐக்கிய அமெரிக்கா |

PAST PAPERS WIKI

மேற்குறித்த ஒவ்வொரு ஏற்றுமதி உருப்படியையும் அதற்கெதிரே குறிப்பிட்டுள்ள சந்தைக்கு அனுப்புவதற்கான சரியான போக்குவரத்து ஊடகங்களைக் கொண்ட தெரிவு யாது?

(1) கடல் – ஆகாயம் – ஆகாயம் – கடல்
(2) ஆகாயம் – கடல் – கடல் – ஆகாயம்
(3) கடல் – ஆகாயம் – ஆகாயம் – ஆகாயம்
(4) கடல் – ஆகாயம் – கடல் – ஆகாயம்
(5) ஆகாயம் – கடல் – ஆகாயம் – கடல் (......)

Past Papers Wiki



**16.** பின்வரும் அட்டவணையானது நவீன சில்லறை விற்பனை நிலையங்களில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் சிலவற்றையும் அவற்றினது தொழிற்பாடுகளையும் காட்டுகின்றது.

| தொழில்நுட்பங்கள் | தொழிற்பாடுகள் |
|---|---|
| (i) வானொலி அதிர்வெண் அடையாளங்காட்டி (RFID) | A - விரைவானதும் மிகச் சரியானதுமான பற்றுச்சீட்டுக்களை வழங்கக் கூடியதாக இருத்தல் |
| (ii) சரக்கிருப்பு முகாமை மென்பொருள் | B - விற்பனைச் செயற்றிறனை மேம்படுத்தல் |
| (iii) வாடிக்கையாளர் உறவு முகாமை (CRM) மென்பொருள் | C - காசாளரின் உதவியின்றி கொடுப்பனவைச் செய்ய முடிதல் |
| (iv) சுயமாகச் சரிபார்க்கும் இயந்திரம் | D - குறியிடப்பட்ட (tagged) உருப்படிகளைத் தன்னியக்கமாக இனங்காண முடிதல் |
| (v) விற்பனை இட (POS) முறைமை | E - வழங்கற் சங்கிலித் தெரிவு நிலையினை மேம்படுத்தல் |

மேலே தரப்பட்டுள்ள தொழில்நுட்பங்களின் ஒழுங்கிற்கேற்ப தொழிற்பாடுகளைச் சரியாகக் காட்டும் தெரிவு யாது?

(1) B, E, C, D, A (2) B, E, D, C, A (3) D, E, B, A, C
(4) D, E, B, C, A (5) E, D, A, B, C (……)

**17.** முகநூலினூடாக தனிப்பட்டவர்களிடையே நேரடியாகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதும் விற்பனை செய்வதும்

(1) B2B எனப்படும். (2) B2C எனப்படும். (3) B2G எனப்படும்.
(4) C2C எனப்படும். (5) G2C எனப்படும். (……)

**18.** உற்பத்திப்பொருட்கள் அல்லது சேவைகளினது சூழல் அனுகூலங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் மேம்படுத்தலினை மேற்கொள்வதானது

(1) சமூக சந்தைப்படுத்தல் எனப்படும்.
(2) பசுமைச் சந்தைப்படுத்தல் எனப்படும்.
(3) உறவுமுறைச் சந்தைப்படுத்தல் எனப்படும்.
(4) வேகமாகப் பரவும் (Viral) சந்தைப்படுத்தல் எனப்படும்.
(5) நேர் சந்தைப்படுத்தல் எனப்படும் (……)

**19.** பின்வருவனவற்றுள் மிடுக்கான (SMART) நோக்கம் யாது?

(1) எதிர்வரும் வருடத்திற்குள் வணிகத்தை விரிவாக்குதல்
(2) எதிர்வரும் 6 மாதங்களுக்குள் விற்பனை எல்லையை முன்னேற்றுதல்
(3) எதிர்காலத்தில் ஊழியர் புரள்வினை 3% இனால் குறைத்தல்
(4) சிறந்த விளைவினைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்காலத்தில் விளைதிறனாகப் பணியாற்றுதல்
(5) எதிர்வரும் 6 மாதங்களுக்குள் விற்பனையினை 10% இனால் அதிகரித்தல் (……)

**20.** நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையைக் குறைவடையச் செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் தொழிற்சாலைத் தளவமைப்பு யாது?

(1) செயன்முறை (2) உற்பத்திப்பொருள் (3) கல
(4) நிலையான (நிலையான இட) (5) கலப்பு (……)

**21.** பின்வரும் உருவானது உற்பத்திப்பொருள் ஒன்றின் இலாப - நட்டமற்ற புள்ளியைக் காட்டுகின்றது.




மேலே தரப்பட்ட உருவில் மொத்த நட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சரியான தெரிவு யாது?

(1) A + B (2) A + D (3) B + C (4) B + D (5) C + D (……)

**22.** நிறுவனம் ஒன்றிற்கான வாய்ப்பினையும் அச்சுறுத்தலையும் சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?

(1) திடமான பண்டக்குறிப் பிரதிமையும் திறனுள்ள ஊழியர்களின் பற்றாக்குறையும்
(2) சமூக ஊடகப் பயன்பாட்டினது அதிகரிப்பும் இணையப் பாதுகாப்பு இடர்களின் உயர்வும்
(3) உற்பத்திப்பொருளின் உயர் தரமும் வாடிக்கையாளர்களின் விசுவாசமும்
(4) குறைவான ஊழியர் புரள்வும் நிறுவனத்தின் மோசமான தலைமைத்துவமும்
(5) திடமான அணிக் (team) கலாசாரமும் நிதி உறுதித்தன்மையும் (……)

[பக். 5 ஐப் பார்க்க

**23.** பின்வரும் அட்டவணையானது வழங்கற் சங்கிலி முகாமை தொடர்பான சொற்பதங்களையும் அவற்றின் விவரணங்களையும் காட்டுகின்றது.

| சொற்பதங்கள் | விவரணங்கள் |
|---|---|
| (i) உற்பத்தி | A - பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களை இனங்காணுதலும் தெரிவுசெய்தலும் |
| (ii) பெறுகை | B - உள்ளீடுகளைப் பூர்த்தியான பொருட்களாக மாற்றம் செய்தல் |
| (iii) JIT முறை | C - தேவையான நேரத்தில் உற்பத்திக்காக மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் |
| (iv) வழங்கல் மூலங்கள் | D - வணிகச் செயற்பாடுகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் |

மேலே தரப்பட்டுள்ள சொற்பதங்களின் ஒழுங்கிற்கேற்ப விவரணங்களைச் சரியாகக் காட்டும் தெரிவு யாது?

(1) A, D, C, B (2) B, A, C, D (3) B, D, C, A
(4) C, B, D, A (5) C, D, B, A (……)

**24.** பின்வரும் அட்டவணையில் **A, B** ஆகிய கம்பனிகளின் நிதித் தரவுகள் தரப்பட்டுள்ளன.

| உருப்படி | கம்பனி A | கம்பனி B |
|---|---|---|
| கடன் விற்பனைகள் (ரூ.) | 2 500 000 | 3 200 000 |
| தேறிய இலாபம் (ரூ.) | 500 000 | 800 000 |
| வியாபாரக் கடன்படுநர் (ரூ.) | 200 000 | 400 000 |

$$\text{தேறிய இலாப வீதம்} = \frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனைகள்}} \times 100$$

$$\text{வியாபாரக் கடன்படுநர் புரள்வு விகிதம்} = \frac{\text{கடன் விற்பனைகள்}}{\text{வியாபாரக் கடன்படுநர்}}$$

மேலே தரப்பட்டுள்ள தகவல்களுக்கமைய

(1) கம்பனி A ஆனது மிகவும் இலாபகரமானதாயினும் கடனை வசூலிப்பதில் கம்பனி B இனைவிட வினைத்திறன் குறைவானதாகும்.
(2) கம்பனி B ஆனது மிகவும் இலாபகரமானதாயினும் கடனை வசூலிப்பதில் கம்பனி A இனைவிட வினைத்திறன் குறைவானதாகும்.
(3) கம்பனி A ஆனது இலாபகரமானதுடன் கடனை வசூலிப்பதிலும் கம்பனி B இனைவிட வினைத்திறனானதாகும்.
(4) கம்பனி B ஆனது இலாபகரமானதுடன் கடனை வசூலிப்பதிலும் கம்பனி A இனைவிட வினைத்திறனானதாகும்.
(5) கம்பனி A ஆனது மிகவும் இலாபகரமானதுடன் கம்பனி B ஆனது கடனை வசூலிப்பதில் மிகவும் வினைத்திறனானதாகும். (……)

**25.** பின்வருவன நிதி மூலங்கள் சிலவாகும்.

A - காரணிப்படுத்தல் B - முயற்சி மூலதனம்
C - தனியாள் உரிமை D - அடமானம்
E - சாதாரண பங்குகள் F - வாக்குறுதிப் பத்திரங்கள்
G - தொகுதிக் கடன்கள் H - முன்னுரிமைப் பங்குகள்
I - நிறுத்தி வைத்த இலாபங்கள் J - வணிகத் தாள்கள்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் உரிமை நிதி மூலங்களை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, C, H, J (2) B, C, E, H, I (3) B, C, F, H, J
(4) C, B, E, F, I (5) C, E, F, H, I (……)

**26.** பின்வருவன மனித வள முகாமையுடன் தொடர்புடைய சொற்பதங்கள் சிலவாகும்.

A - பயிற்சி B - ஊதியம்
C - திறன்கள் D - அறிவு
E - ஆளுமை F - வெகுமதிகள்
G - அனுபவம் H - பதவி உயர்வுகள்
I - அங்கீகாரம் J - மனப்பாங்கு

மேலே தரப்பட்டவற்றுள் ஊழியர்களுக்குத் தேவையான விசேட பண்புகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A, C, D, E, I (2) A, C, E, F, G (3) C, D, E, G, J
(4) C, D, F, G, I (5) D, E, H, G, J (……)

**27.** பின்வருவன நிறுவனம் ஒன்றின் பிணக்குகளை வெளிக்காட்டும் அறிகுறிகள் சிலவாகும்.

A - குறைவான உற்பத்தித்திறன் B - மறியல் போராட்டம்
C - கதவடைப்பு D - ஊழியர் புரள்வு
E - சட்டப்படி வேலை செய்தல் F - வேலை நிறுத்தங்கள்
G - ஆர்ப்பாட்டம் H - ஊழியர் வரவின்மை

மேலே தரப்பட்டவற்றுள் ஊழியர்களுக்கும் உடைமையாளர்களுக்கும் இடையேயான பிணக்குகளின் மறைமுக அறிகுறிகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, E, G (2) A, D, E, H (3) B, D, E, H
(4) B, E, F, G (5) C, D, F, H (……)

[பக். 6 ஐப் பார்க்க

**28.** இணையவழிக் குரல் நடப்பொழுங்கு (VoIP) தொடர்பிலான பின்வரும் கூற்றுக்கள் இரண்டினையும் கருதுக.

**கூற்று A :** நிலையான தொலைபேசி வடங்களுடன் தொடர்புடைய தொலைபேசிகளுக்குப் பதிலாக இணைய வசதிகளினூடான அழைப்புக்களை மேற்கொள்வதற்கு VoIP ஆனது பயன்படுத்துவோருக்கு வழிசமைக்கின்றது.

**கூற்று B :** நிலையான தொலைபேசி இணைப்பு முறைமையைப் பயன்படுத்துவதனூடாக மட்டுமே VoIP சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், செல்லிடச் சாதனங்களினூடாக மேற்கொள்ள முடியாது.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்களில்

(1) A மட்டுமே சரியானதாகும்.
(2) B மட்டுமே சரியானதாகும்.
(3) A, B ஆகிய இரண்டும் தவறானவையாகும்.
(4) A, B ஆகிய இரண்டும் சரியானவையாகும் அதேவேளை B ஊடாக A விபரிக்கப்படுகிறது.
(5) A, B ஆகிய இரண்டும் சரியானவையாகும் அதேவேளை A ஊடாக B விபரிக்கப்படுகிறது. (……)

**29.** சொல் முறைவழியாக்கம் (word processing) என்பது

(1) செயற்பாட்டு மென்பொருளாகும். (2) பிரயோக மென்பொருளாகும்.
(3) பயன்பாட்டு மென்பொருளாகும். (4) நிகழ்ச்சிநிரல் மென்பொருளாகும்.
(5) மொழி மென்பொருளாகும். (……)

**30.** தொழில்நுட்பக் கம்பனி ஒன்று பின்வரும் தீர்மானங்களுக்கு வந்துள்ளது.

I – தட்டச்சு உற்பத்தியை நிறுத்துதல்
II – செல்லிடச் செயலிகளில் (Mobile app) ஒன்றினை புதிய சிறப்பம்சங்களுடன் தரமுயர்த்தல்




உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்ட வரைபில் மேற்குறித்த தீர்மானங்கள் இரண்டும் ஒழுங்கு முறையில் எடுத்துக்காட்டப்படும் சரியான தெரிவு யாது?

(1) A யும் B யும் (2) A யும் D யும் (3) B யும் C யும்
(4) D யும் B யும் (5) D யும் C யும் (……)

(02×30 = 60 புள்ளிகள்)

60

● **31** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையெழுதும்போது **பொருத்தமான சொல் / சொற்களைப்** பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

**31.** (அ) உற்பத்தியின் தன்மை அடிப்படையில் வீதிகளை நிர்மாணித்தல் ................................ துறைக்கு உரித்தானதாகும் அதேவேளை வங்கியியலானது ................................ துறைக்கு உரித்தானதாகும்.

(ஆ) வணிகங்களினால் மனித ................................ உருவாக்க முடியுமானதாக உள்ள போதிலும் அவற்றினால் மனித ................................ உருவாக்க முடியாது.

**32.** (அ) தனிநபர்கள் தமது வங்கி வட்டி வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், அதில் இருந்து கழிக்கப்படும் வரியானது ................................ வரி என அழைக்கப்படுவதுடன் முதலீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் உழைக்கப்படும் இலாபங்களின் மீது விதிக்கப்படும் வரியானது ................................ வரி என அழைக்கப்படும்.

(ஆ) ISO ................................ ஆனது தர முகாமைத்துவ முறைமைகளுடன் தொடர்புடையதாக இருக்கும் அதேவேளை ISO ................................ ஆனது உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது.

**33.** (அ) சிக்கனக் கட்டளைத் தொகை என்பது ................................ கிரயமும் ................................ கிரயமும் இடைவெட்டும் புள்ளியாகும்.

(ஆ) மூலப்பொருட்களைக் கையாள்வது ................................ ஏற்பாட்டியலுக்கு உதாரணமாகும் அதேவேளை பூர்த்தியான உற்பத்திப்பொருட்களை விநியோகித்தல் ................................ ஏற்பாட்டியலுக்கு உதாரணமாகும்.

**34.** (அ) பின்பற்றுவோரது நலமேம்பாட்டிற்கு முன்னுரிமையளிப்பது ................................ சார்ந்த தலைமைத்துவமாவதுடன் இலக்குகள் மற்றும் காலக்கெடுவிற்கு முன்னுரிமையளிப்பது ................................ சார்ந்த தலைமைத்துவமாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

(ஆ) முகாமையாளர் ஒருவர் அவரது முறையான பதவிநிலையின் மூலம் பெற்றுக்கொள்வது ................................ வலுவாகும் அதேவேளை அவரது அறிவு, திறன்கள் மற்றும் அனுபவத்தின் மூலம் பெற்றுக்கொள்வது ................................ வலுவாகும்.

**35.** (அ) முகாமையாளர் ஒருவருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை ................................ என அழைக்கப்படுவதுடன் நேரடி மேற்பார்வையாளரிடம் இருந்து மாத்திரம் ஊழியரொருவர் அறிவுரைகளை பெற்றுக்கொள்வது ................................ என அழைக்கப்படும்.

(ஆ) ஊழியர்களுடன் வேலையைத் திறமையாகச் செய்யும் முகாமையாளர் ஒருவரின் ஆற்றலை ................................ திறன்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை நிறுவனம் பற்றி முழுமையாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை ................................ திறன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

**36.** (அ) சந்தைப்படுத்தலில், ................................ எண்ணக்கருவானது தொழிற்சாலையின் தொடக்கப் புள்ளியாகக் காணப்படும் அதேவேளை சந்தையானது................................ எண்ணக்கருவின் தொடக்கப் புள்ளியாகும்.

(ஆ) உற்பத்தியாளர் ஒருவர் புடைவைகளை ஆடைத் தொழிற்சாலைக்கு விற்பனை செய்வது ................................ சந்தைக்கு உதாரணமாகும் அதேவேளை உற்பத்தியாளர் ஒருவர் புடைவைகளை இறுதி நுகர்வோருக்கு விற்பனை செய்வது ................................ சந்தைக்கு உதாரணமாகும்.

**37.** (அ) துணைநில் கடன் வசதி வீதமானது குறுங்கால சந்தை வட்டி வீதத்தின் ................................ வரையறையாகத் தொழிற்படும் அதேவேளை துணைநில் வைப்பு வசதி வீதமானது குறுங்கால சந்தை வட்டி வீதத்தின் ................................வரையறையாகத் தொழிற்படுகிறது.

(ஆ) ஒரு வருடத்திற்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட குறுங்கால அரச பிணைகள் திறைசேரி ................................ என அழைக்கப்படும் அதேவேளை அரசாங்கத்தினால் வழங்கப்படும் நீண்டகாலக் கடன் கருவிகள் திறைசேரி ................................ என அழைக்கப்படும்.

**38.** (அ) வேலை ஒன்றின் ஆழத்தை விரிவாக்குவது வேலை ................................ என அழைக்கப்படும் அதேவேளை வேலை ஒன்றின் பரப்பை விரிவாக்குவது வேலை ................................ என அழைக்கப்படும்.

(ஆ) அரசசேவை சேமலாப நிதியமானது இலங்கை ................................ திணைக்களத்தினால் முகாமை செய்யப்படும் அதேவேளை ஊழியர் சேமலாப நிதியமானது இலங்கை ................................ முகாமை செய்யப்படுகிறது.

**39.** (அ) வணிகம் ஒன்று அமைந்திருக்கும் சரியான இடத்தைக் காட்டும் வழியைக் கண்டறிதல் முறைமையானது ................................ என அழைக்கப்படும் அதேவேளை மனிதர்களைப் போன்று தீர்மானங்களை மேற்கொள்ள உதவும் இயந்திரங்களின் கணினித் தொழில்நுட்பம் ................................ என அழைக்கப்படுகிறது.

(ஆ) கொடுக்கல்வாங்கல்கள் செயன்முறைப்படுத்தல் முறைமையானது (TPS) அடிப்படையில் ................................ மட்ட முகாமையாளர்களால் பயன்படுத்தப்படும் அதேவேளை நிறைவேற்று உதவி முறைமையானது (ESS) அடிப்படையில் ................................ மட்ட முகாமையாளர்களால் பயன்படுத்தப்படும்.

**40.** (அ) நிறுவனமொன்றின் வணிகத் திட்டமானது விலையிடல் மற்றும் மேம்படுத்தல் தந்திரோபாயங்களை அதன் ................................ திட்டத்தின் ஊடாக முன்வைப்பதுடன் எதிர்பார்க்கப்படும் வருமானங்களையும் கிரயங்களையும் அதன் ................................ திட்டத்தினூடாக எதிர்வுகூறுகின்றது.

(ஆ) வியாபாரப் பிரமாணங்களை உருவாக்குவதன் மூலம் சுதந்திரமான மற்றும் நியாயமான பூகோள ரீதியான வணிகத்தை ஊக்குவிக்கும் சர்வதேச அமைப்பு ................................ ஆகும் அதேவேளை தனது அங்கத்துவ நாடுகளிற்கிடையே நிதி உதவிகள் மற்றும் நாணய உறுதித்தன்மையை மேம்படுத்தும் சர்வதேச அமைப்பு ................................ ஆகும்.

● **41** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்குப் **பொருத்தமான விடைகளைத்** தரப்பட்ட வெற்றிடங்களில் எழுதுக.

**41.** பின்வரும் உற்பத்தித்திறன் சுட்டெண்களைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் சூத்திரங்களை எழுதுக.

(1) ஊழிய : ................................ (2) மூலப்பொருள் : ................................

(3) இயந்திர : ................................ (4) மொத்த : ................................

[பக். 8 ஐப் பார்க்க

**42.** முயற்சியாளர்களில் இருந்து அகமுயற்சியாளர்கள் வேறுபடும் வழிகள் **இரண்டினை** எழுதுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**43.** இலங்கையில் உரிமம்பெற்ற விசேட வங்கிகள், வணிகங்களுக்கு வழங்கும் சேவைகள் **நான்கினை** எழுதுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

**44.** முழுமைப்படைப்புச் சந்தைப்படுத்தலின் பிரதான கூறுகள் **நான்கினை** எழுதுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

**45.** வேலை உற்பத்தி முறையுடன் தொடர்புடைய கீழே தரப்பட்டுள்ள செயற்பாட்டு நியதிகளின் நடத்தைகள் உயர்வானவையா அல்லது தாழ்வானவையா என்பதனைக் குறிப்பிடுக.

| **நியதிகள்** | **உயர்வு / தாழ்வு** |
|---|---|
| (i) உற்பத்தி அளவு | ........................................ |
| (ii) உற்பத்திப்பொருள் வீச்சு | ........................................ |
| (iii) உற்பத்திச் செயன்முறையின் நெகிழ்வுத்தன்மை | ........................................ |
| (iv) உற்பத்திக் கிரயம் | ........................................ |

**46.** வணிகம் ஒன்று பெற்றுக்கொள்ளக்கூடிய கடன் நிதிக்கான குறுங்கால, நீண்டகால மூலங்கள் **இரண்டு** வீதம் எழுதுக.

| **குறுங்காலம்** | **நீண்டகாலம்** |
|---|---|
| (1) .................................................. | (1) .................................................. |
| (2) .................................................. | (2) .................................................. |

**47.** நிறுவனம் ஒன்றிற்கு அமைய உழியர்களினால் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள், பிரதிகூலங்கள் **இரண்டு** வீதம் எழுதுக.

| **அனுகூலங்கள்** | **பிரதிகூலங்கள்** |
|---|---|
| (1) .................................................. | (1) .................................................. |
| (2) .................................................. | (2) .................................................. |

**48.** தகவல் முறைமை (IS) ஒன்றின் பிரதான கூறுகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

**49.** கம்பனி ஒன்று சந்தை அளவையாய்வினை மேற்கொள்வதற்காக முதனிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய முறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

**50.** வர்த்தக உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் முழுமையான வடிவத்தினை எழுதுக.

(1) SAFTA : ..........................................................................................

(2) APTA : ..........................................................................................

(3) USMCA : ..........................................................................................

(4) ASBAN : ..........................................................................................

40

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

32 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. DM Foods ஆனது சுகாதார ரீதியாக செயன்முறைப்படுத்தப்பட்ட பழச்சாறுகளை உற்பத்தி செய்யும் உள்நாட்டுக் கம்பனி ஆகும். இக்கம்பனியானது உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து பல்வேறு வகையான பழங்களைக் கொள்வனவு செய்யும் அதேவேளை இப்பழவகைகளின் விநியோகம் பருவகால மாற்றங்களுக்கேற்ப வேறுபடுகின்றது. DM Foods தனது உற்பத்திப்பொருட்களுக்குக் கவர்ச்சிகரமான பொதியிடல், நுகர்வோரின் விருப்பங்களுக்கேற்ற மேம்படுத்தப்பட்ட விற்றமின் சுவையூட்டிகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றினூடாக பெறுமதி சேர்க்கின்றது. கம்பனியின் முகாமையாளர்கள், தமது வழங்குநர்கள், சிறப்புச் சந்தைகள் மற்றும் ஊழியர்களுக்கிடையே நெருக்கமான உறவினைப் பேணுகின்றனர். அதேவேளை புதிய பழச்சாறு உற்பத்தியாளர்கள் சந்தையுள் நுழைவதனால் DM Foods கம்பனிக்கு நிலவும் போட்டித்தன்மை அதிகரித்தது.

(i) (அ) மேற்குறித்த கம்பனியினால் நிறைவேற்றப்படும் மனிதத் தேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த கம்பனி உற்பத்திப்பொருட்களுக்குப் பெறுமதி சேர்ப்பது, இக்கம்பனியின் இலாபத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும் என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) மேற்குறித்த கம்பனி தனது உற்பத்திப்பொருட்களைச் சிறப்புச் சந்தைகளினூடாக விற்பனை செய்வதனால் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) DM Foods கம்பனியானது பழ உற்பத்தியாளர்களுடன் ஏன் சிறந்த உறவினைப் பேணவேண்டும் என்பதற்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) மேற்குறித்த கம்பனியின் உள்வாரி அக்கறையுடைய தரப்பினர் **இருவரைப்** பெயரிட்டு, அவ் ஒவ்வொரு தரப்பினரும் ஏன் கம்பனியின் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்துகின்றனர் என்பதற்கான ஒவ்வொரு காரணம் வீதம் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த விடய ஆய்வில் அண்மிய பணிச் சூழலுக்கு உரித்தான தரப்பினர் **நால்வரினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) பருவகால மாற்றங்களின் விளைவாக பழ விநியோகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளினால் இக்கம்பனியானது முகங்கொடுக்க வேண்டிய அச்சுறுத்தல் ஒன்றினையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஒன்றினையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சுகாதாரமான முறையில் தமது உற்பத்திப்பொருட்களைச் செயன்முறைப்படுத்துவதால் DM Foods கம்பனிக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) தனது உள்நாட்டுப் பழ உற்பத்தியாளர்களுக்காக DM Foods கம்பனியினால் நிறைவேற்றக்கூடிய பொறுப்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சூழலின் நிலைபேறான தன்மையினை மேம்படுத்துவதற்கு DM Foods கம்பனியானது பங்களிப்பு வழங்கத்தக்க வழிமுறைகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**2.** சதுர் மற்றும் விதன் ஆகியோர் எழுத்து மூலமான உடன்படிக்கையின்றி இலத்திரனியல் உபகரணங்களை உற்பத்தி செய்யும் பங்குடைமையினை ஆரம்பித்தனர். இந்நிறுவனமானது தனது வணிக நடவடிக்கைகளை சர்வதேச சந்தைகளுக்கு விரிவுபடுத்துவது தொடர்பில் அரசிடமிருந்து ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றது. சில வருடங்களின் பின்னர் விதன் தனது முதலீட்டுப் பங்கினை மீளப் பெற்றுக்கொண்டு பங்குடைமையிலிருந்து விலகினார். இதன் பின்னர் இவ்வணிகம் தனியுடைமையாக மாற்றப்பட்டது. இக்காலப்பகுதியில் இலத்திரனியல் கைத்தொழிலின் மீது விதிக்கப்பட்ட உயர்ந்த வரி, உயர் தர நியமங்கள் மற்றும் ஊழியக் கிரய அதிகரிப்பு போன்ற பல்வேறு சவால்களுக்கு அது முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

(i) (அ) மேற்குறித்த வணிகத்தின் உற்பத்திப்பொருட்களைச் சர்வதேச சந்தை வரை விரிவாக்கம் செய்வதற்கு அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய உதவிச் சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இவ்வணிகத்தினால் அரசிற்குக் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) இப்பங்குடைமையானது இலாப நட்டங்களை பங்காளரிடையே எந்த அடிப்படையில் பகிர்ந்து கொள்ளலாம் என்பதனை காரணம் ஒன்றினூடாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இலத்திரனியல் உபகரணக் கைத்தொழில் மீது அரசினால் விதிக்கப்படும் உயர்ந்த தர நியமங்களால் பாவனையாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) பங்குடைமை வணிகத்தினை தனியுடைமையாக மாற்றுவதனால் சதுர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) வியாபாரப் பெயர்ப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனியுடைமை வணிகத்தினைப் பதிவு செய்யாமல் விடுவதனால் வணிகத்திற்கு ஏற்படும் பிரதிகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சதுர் தனது வணிகத்தினை வரையறுத்த தனியார் கம்பனியாக மாற்றுவதற்கு எண்ணுவாராயின், கம்பனிப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய அத்தியாவசியமான ஆவணங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) சதுர் தனது இலத்திரனியல் உற்பத்திப்பொருட்களைச் சூழலுக்கு நேயமான விதத்தில் உற்பத்தி செய்யக்கூடிய வழிவகைகள் **இரண்டினைப்** பரிந்துரை செய்க. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியக் கிரய அதிகரிப்பினால் உற்பத்திக் கிரயத்தில் ஏற்படும் தாக்கத்தினைக் குறைத்துக் கொள்வதற்கு சதுர் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்கள் **இரண்டினைப்** பரிந்துரை செய்க. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3.** நசீஹா, அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான சிற்றளவு வணிகமொன்றினை ஆரம்பித்தார். வணிகத்தின் வளர்ச்சி காரணமாக அவர் ஊழியர்கள் ஐந்து பேரை ஆட்சேர்ப்புச் செய்ததுடன், உற்பத்தி இயலளவை விரிவாக்குவதற்காக நுண்நிதிக் கடன் வசதியூடாக தானியங்கி இயந்திரம் ஒன்றினையும் கொள்வனவு செய்தார். அதே நேரத்தில் நசீஹா, தனது உற்பத்திப்பொருட்களின் சட்டரீதியான பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக வியாபாரக் குறியினைப் பதிவு செய்து கொண்டார், அத்துடன் அவர் தனது சேமிப்பினை பங்குச் சந்தையிலும் அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்திலும் முதலீடு செய்தார்.

(i) (அ) முயற்சியாண்மையாளர் என்ற வகையில் இலங்கையின் பொருளாதாரத்துக்கு நசீஹா பங்களிப்புச் செய்யக்கூடிய வழிவகைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த விடய ஆய்வில் நசீஹாவின் வணிகமானது சிற்றளவு வணிகமாக வகைப்படுத்தப்படுவதுடன் தொடர்புடையதாகக் குறிப்பிடப்பட்டுள்ள நியதியினைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) (அ) பங்குச் சந்தையில் முதலீடு செய்வதனைவிட வங்கிச் சேமிப்பினூடாக நசீஹா பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நுண்நிதிக் கடனைப் பெற்றுக்கொள்வதனால் நசீஹாவிற்கு ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) தனது வணிகத்தினை விரிவுபடுத்தும்போது, நசீஹா முகங்கொடுக்க நேரிடும் சவால்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) நசீஹா தனது வணிகத்தினை விரிவுபடுத்துவதற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வங்கிகள் அல்லாத அரச நிறுவனங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களில் முதலீடு செய்வதனால் நசீஹா பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) தனது வணிகத்தினை தன்னியக்கமானதாக மாற்றுவதனூடாக நசீஹா பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) 'வியாபாரக் குறி' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) தனது உற்பத்திப்பொருட்களுக்கு வியாபாரக் குறியினைப் பதிவு செய்வதனால் நசீஹா பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

Past Papers Wiki



4. (i) (அ) பொதுக் காப்புறுதியினால் வணிகமொன்றுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் (SLECIC) ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) 'ஏற்பாட்டியல்' (Logistics) என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) ஏற்பாட்டியல் முகாமைத்துவத்தின் பிரதான தொழிற்பாடுகள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) இருதரப்பு மற்றும் பல்தரப்பு வியாபார உடன்படிக்கைகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நேர் மற்றும் நேரில் விநியோக வழிமுறைகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) சர்வதேச வர்த்தகத்தில் உற்பத்தி நாட்டுச் சான்றிதழைப் பயன்படுத்துவதனால் இறக்குமதியாளர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) அதிகாரபூர்வமற்ற வழிமுறைகளினூடாக சர்வதேச ரீதியாக பண அனுப்பல்களை மேற்கொள்வதனால் ஒரு நாட்டுக்கு ஏற்படத்தக்க பிரதிகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது வர்த்தகத் தடையினை விதிப்பதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசினால் விதிக்கப்படும் அளவுசார் மற்றும் பண்புசார் கட்டுப்பாடுகள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

5. மதுமதி பிளாத்திக்கு போத்தல் உற்பத்தித் தொழிற்சாலையின் உற்பத்தி முகாமையாளரினால், விரயத்தைக் குறைப்பதற்காகவும் நாளாந்த உற்பத்தி ஆற்றலை 7500 போத்தல்களில் இருந்து 10 000 போத்தல்கள் வரை அதிகரிப்பதற்காகவும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. முகாமையானது, மேல்மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை தெளிவான கட்டளைச் சங்கிலியினை கட்டளையிடலில் பயன்படுத்தும் அதேவேளை தீர்மானம் எடுத்தலில் ஊழியர்களின் பங்குபற்றுதலை ஊக்குவிக்கின்றது. எவ்வாறாயினும், மோசமான சரக்கிருப்புக் கட்டுப்பாட்டு முறைமையினால் இருப்புப் பற்றாக்குறையும் உற்பத்தித் தாமதமும் ஏற்பட்டது.

(i) (அ) விரயங்களைக் குறைப்பதனூடாக மதுமதி பிளாத்திக்கு நிறுவனம் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பிளாத்திக்குப் போத்தல்களினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) 'கட்டளைச் சங்கிலி' என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) முகாமையினால் நடைமுறைப்படுத்தப்படும் மேலிருந்து கீழான கட்டளையிடல் அணுகுமுறையின் அனுகூலமொன்றினையும் பிரதிகூலமொன்றினையும் தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) பங்குபற்றல் தலைமைத்துவப் பாங்கானது, ஊழியர் ஊக்குவிப்பில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) தீர்மானம் எடுத்தலில் ஊழியர் பங்குபற்றுதலை ஊக்குவிப்பதனால் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) மோசமான சரக்கிருப்புக் கட்டுப்பாட்டிற்கான காரணங்கள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தித் தாமதத்தினால் மதுமதி பிளாத்திக்கு போத்தல் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) தற்போதைய வள ஆற்றலுடன் 10 000 போத்தல்கள் உற்பத்தி மட்டத்தினை அடைவதற்குப் பயன்படுத்தக்கூடிய தந்திரோபாயங்கள் **இரண்டினைப்** பரிந்துரை செய்க. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியில் 'பயன்படாக் காலம்' என்பதனால் கருதப்படுவது யாது என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

6. உள்ளூர் தொலை சந்தைப்படுத்தல் (tele-marketing) கம்பனியான சூர்யா, சர்வதேச வணிகங்களின் கடுமையான போட்டிக்கு முகங்கொடுக்கின்றது. நாடு முழுவதும் தனது சேவையினை பரவலாக்குவதற்காக நிறுவனம் எண்ணிம சந்தைப்படுத்தல் பிரசார நிகழ்ச்சித்திட்டமொன்றை சமூக ஊடகங்களின் ஊடாகப் பிரசாரப்படுத்தியது. அதற்கு மேலதிகமாக வீடுகளுக்குத் தமது உற்பத்திப்பொருட்களை விநியோகிப்பதில் சூழல் நேயப் பொதியிடலினையும் அறிமுகம் செய்துள்ளது. மேலும், தனது சேவைகளை விரைவுபடுத்துவதற்காக விநியோக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு வணிக வங்கியிலிருந்து கடன் வசதியினையோ அல்லது குத்தகை வசதியினையோ பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கின்றது. அத்துடன் கம்பனியின் அதிகரித்த செயற்பாட்டுக் கிரயங்களின் காரணமாக காசுப் பாய்ச்சல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

(i) (அ) சூர்யா கம்பனி பயன்படுத்திய சந்தைப்படுத்தல் கலவை தந்திரோபாயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வீடுகளுக்கு விநியோகம் செய்வதனால் வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(ii) (அ) சமூக ஊடக சந்தைப்படுத்தல் பிரசார நிகழ்ச்சித்திட்டங்களினால் சூர்யா கம்பனிக்குக் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) எண்ணிம சந்தைப்படுத்தல் பிரசார நிகழ்ச்சித்திட்டங்களினால் இவ்வணிகம் முகங்கொடுக்கக்கூடிய இடர்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) சூழல்நேயப் பொதியிடலினூடாக கம்பனியினது பண்டக்குறி பிரதிமையை மேலும் முன்னேற்றுவதற்கான வழிவகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) விநியோக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு வணிக வங்கியிடம் இருந்து கடனைப் பெற்றுக்கொள்வதனால் சூர்யா கம்பனிக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சூர்யா கம்பனியானது குத்தகை வசதியினூடாக விநியோக வாகனங்களைக் கொள்வனவு செய்யுமாயின், செயற்பாட்டுக் குத்தகையினைவிட நிதிக் குத்தகை ஏன் மிகச் சிறந்தது என்பதற்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(v) (அ) சூர்யா கம்பனி தனது காசுப் பாய்ச்சல் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய தந்திரோபாயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தமது வாகனக் குழுமத்தினைப் பேணுவதைவிட விநியோகச் சேவைகளை வெளியாரிடமிருந்து பெற்றுக்கொள்வதனால் கிடைக்கும் அனுகூலமொன்றினையும் பிரதிகூலமொன்றினையும் தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

7. வணிகமொன்றின் முகாமையானது, ஆட்சேர்ப்பினைச் செய்வதற்காக உத்தியோகபூர்வ அழைப்பற்ற நேர்முகப் பரீட்சை முறை (walk-in -interview) ஒன்றினைத் திட்டமிட்டுள்ளது. அத்துடன் நிறுவனமானது ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக நன்கு வடிவமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றினையும் வெகுமதி முறைமை ஒன்றினையும் உருவாக்கியுள்ளது. மேலும் நிறுவனத்தின் முகாமைக் கட்டுப்பாட்டு முறைமையினையும் மனிதவளத் திட்டத்தினையும் மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

(i) (அ) உத்தியோகபூர்வ அழைப்பற்ற நேர்முகப்பரீட்சையினால் வணிகத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உத்தியோகபூர்வ அழைப்பற்ற நேர்முகப் பரீட்சை முறையைவிட விரைவாக ஆட்சேர்ப்புச் செய்யக்கூடிய மாற்று முறைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதால் ஊழியர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய நிதிசாரா வெகுமதிகள் **இரண்டினைப்** பரிந்துரை செய்க. (02 புள்ளிகள்)

(iii) (அ) ஊழியர் மரபுரிமைத் திட்டத்தினால் நிறுவனத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகமொன்றினது குறுங்கால மற்றும் நீண்டகால திட்டமிடல்களுக்கிடையேயான வேறுபாட்டினை உதாரணமொன்றினூடாக எடுத்துக்காட்டுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) முகாமைக் கட்டுப்பாட்டு முறைமையினை மேம்படுத்துவதனால் நிறுவனத்துக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'மனித வளத் திட்டமிடல்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(v) தர முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் 'பூச்சிய வழு' (zero defects) நுட்பமுறையின் நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

8. (i) (அ) 'தேடு பொறி' (search engine) என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) வணிகம் ஒன்றில் இணையப் பாதுகாப்பு (cyber security) அச்சுறுத்தலைத் தவிர்ப்பதற்கான முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) திறந்த மூல (open source) மென்பொருள் பயன்பாட்டினால் வணிகம் ஒன்றிற்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) கணினி முறைமை ஒன்றில் பயன்படுத்தப்படும் உள்ளீட்டுச் சாதனங்கள் (input devices) **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) வணிகத் தீர்மானம் எடுத்தல் தொடர்பில் பெருந்தரவுப் (big data) பயன்பாட்டின் அனுகூலங்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) உள்ளூர் வலையமைப்பிற்கும் (LAN) பரந்த வலையமைப்பிற்கும் (WAN) இடையிலான வேறுபாட்டினை எடுத்துக்காட்டுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) நடைமுறையில் இருக்கும் வணிகத் திட்டம் ஒன்று மீளமைக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத் திட்டமிடலில் நிதி எதிர்வுகூறலில் உள்ள அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) 'செயற்பாட்டுக்கு முந்திய செலவுகள்' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, உதாரணங்கள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகம் ஒன்று செயற்பாட்டுக்கு முந்திய செலவுகளைக் குறைவாக மதிப்பீடு செய்வதனால் ஏற்படும் விளைவுகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

Past Papers Wiki
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library
www.PastPapers.WiKi